புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • நவம்பர் 07, 2024 • புரட்சி 24 • முழக்கம் 44 • விலை ரூ.3.00

## சேலம் அருகே ஜாதிவெறி ; கழகத் தோழர்கள் கள ஆய்வு

# அருந்ததியர் குடியிருப்பு சூறை

**சேலம் அருகே அருந்ததியர் குடியிருப்பு சூறையாடல்! பெண்கள் மீது தாக்குதல்.! ஜாதி வெறியும், போதை வெறியும், தலைக்கேறிய வன்னிய இளைஞர்கள் அராஜகம் அட்டூழியம்.! ஜாதிவெறி, போதை வெறி இளைஞர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.!**

02.10.2024 காலை 11 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் சம்பவம் நடந்த பூசநாயக்கனூர் பகுதிக்கு தோழர்கள் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினர். மேலும் தோழர்கள் மேற்கொண்ட கள ஆய்வு!

சேலம் மாவட்டம் பூசநாயக்கனூர் பெருமாம்பட்டியைச் சேர்ந்த சதீஸ்குமார் என்பவர் சுயமான வேலைவாய்ப்பு மூலம் சொந்தமாக போட்டோகிராப் தொழில் செய்து வருகிறார். தீபாவளி அன்று செம்மண்திட்டு பகுதியில் வசிக்கும் வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் அருந்ததியர் பகுதி அருகே பட்டாசு வெடித்து மது அருந்திக் கொண்டிருந்தனர். இதை அவ்வழியாக வந்த சதீஸ்குமாரின் அண்ணன் மகன் விஜய் என்பவர் எங்கள் குடியிருப்பிற்கு அருகில் அமர்ந்து மது அருந்த வேண்டாம். சற்று தள்ளிப் போங்கள் என்று கூறியுள்ளார். இதனால் ஆத்திரமுற்ற வன்னிய இளைஞர்களுக்கும் விஜய்க்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது.

அங்கிருந்து கிளம்பிய விஜய் வீட்டிற்கு வந்துள்ளார், இதைப் பின் தொடர்ந்து வந்த சில வன்னிய இளைஞர்கள் போதை வெறியோடு, ஜாதி வெறியும் தலைக்கேறி ஜாதி பெயரைச் சொல்லி அருவருக்கத்தக்க ஆபாச வார்த்தைகளில் பேசிக் கொண்டே கடுமையாகத் தாக்கி, பார்றா உங்க வீட்டிலேயே வந்து குடிக்கிறோம் என்று சொல்லி சுமார் பத்துக்கும் மேற்பட்ட வன்னிய இளைஞர்கள் சதீஸ்குமாரின் வீட்டின் கதவை உடைத்து மேற்கூரையை அடித்து நொறுக்கி உள்ளே புகுந்து லேப்டாப், கம்யூட்டர் டிவி, பீரோ உள்ளிட்ட பொருட்களைச் சூறையாடியதோடு வீட்டினுள் இருந்த பெண்களையும் மற்றும் சதீஸ்குமார், விஜய் ஆகியோரை கொலை வெறியுடன் தாக்கியுள்ளனர், இதை படம் எடுத்த அருந்ததியர் பெண்ணையும் தாக்கியுள்ளனர்.

அச்சமயத்தில் அவ்வழி காரில் வந்த கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவர் ஏன் இப்படிச் செய்கிறீர்கள் எனத் தட்டிக் கேட்டதால் ஆத்திரமடைந்த அந்த இளைஞர்கள் ஜெயக்குமாரின் காரின் கண்ணாடியை உடைத்து அவரைக் கொடூரமாகத் தாக்கியுள்ளனர். அவர் கை எலும்பு முறிக்கப்பட்டு, முகத்தில் கொடும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

அவரைப் பாதுகாக்க முயன்ற அவரது உறவினர்கள் வெங்கடாசலம் மற்றும் செல்வராசு ஆகியோரையும் கல்லால் அடித்து காயப்படுத்தினர். காயமடைந்த அனைவரும் சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மேல் சிகிச்சைக்காக கோவை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். ஆதிக்க ஜாதி இளைஞர்கள், தலித் மக்களின் வீடுகளை உடைத்து வன்கொடுமையில் ஈடுபடும் போது எடுக்கப்பட்ட காணொளிக் காட்சிகள் காண்போரைப் பதற வைக்கிறது.

இக்கொடுஞ்செயலில் ஈடுபட்ட 5 சிறுவர்கள் உட்பட 12 பேர் மீது SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் கொலை முயற்சி உள்ளிட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சிறுவர்கள் சிறார் இல்லத்திலும், மற்றவர்கள் சேலம் மத்திய சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கொடூர செயலை வன்மையாகக் கண்டிப்பதோடு, சேதப்படுத்தப்பட்ட பொருள்களைத் துல்லியமாக மதிப்பீடு செய்து உரிய நிவாரணத்தையும் குடியிருப்புக்கு உரிய பாதுகாப்பையும், வழங்கிட வேண்டும் எனத் திராவிடர் விடுதலைக் கழகம் அரசையும், மாவட்ட நிர்வாகத்தையும் கேட்டுக்கொள்கிறது. மேலும் நீதி வேண்டி மாவட்ட வருவாய் அதிகாரி (DRO) அவர்களைச் சந்தித்து மனு அளிக்கப்பட்டது.

ஆய்வின்போது களத்தில் நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன், இளம்பிள்ளை நகர தலைவர் ரமேஷ், சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திவ்யா, வனவாசி நகர செயலாளர் உமா சங்கர், நங்கவள்ளி சந்திரசேகரன், இளம்பிள்ளை கோபி, மணிமாறன், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் கவியரசு ஆகியோர் இருந்தனர்

## கோவையில் பெரியார் நூலகம்



சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம் இருக்கு. மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் இருக்கு. அதனால் கோவையில் இவர்கள் இரண்டு பேரையும் உருவாக்கிய தந்தை பெரியார் பெயரில் நூலகம் மற்றும் அறிவியல் மய்யம் அமைவது தான் பொருத்தமாக இருக்கும். தொண்டு செய்து பழுத்தப் பழம் தந்தை பெரியார் அவர்கள். 80 ஆண்டுகளுக்கு முன்பே இனிவரும் உலகம் எப்படி இருக்க வேண்டும் என்று கனவு கண்ட பகுத்தறிவு ஆசான் அவர். அறிவும், ஆற்றலும், பகுத்தறிவும், பகுத்துண்டு, பல்லுயிர் காக்கும் சமூகத்து மக்களாக இந்த இளைய சமுதாயம் வாழ, வளர தந்தை பெரியாருடைய நூலகமும், அறிவியல் மய்யமும் கோவையில் கம்பீரமாக, மிகச்சிறப்பாக எழ இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

05.11.2024 அன்று கோவையில் நூலகத்திற்கு அடிக்கல் நாட்டிய பின்னர் தமிழ்நாடு முதல்வர் பேச்சு.

# கமலா ஹாரிசும் அமெரிக்கப் புரோகிதமும்



அமெரிக்கா முதல்முதலாக ஒரு பெண் அதிபராகும் வாய்ப்பை இழந்துவிட்டது. ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் வெற்றிபெறவில்லை. கமலாவின் தோல்வி தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களைக் கலங்க வைத்துவிட்டது. கமலா தாய் வழி பார்ப்பன மரபில் வந்தவர். மன்னார்குடி அடுத்த துளசேந்திரபுரம் அவரது பூர்வீகம். கமலாவின் தந்தை ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த கருப்பர் டொனால்டு ஹாரிஸ். ஆனாலும் கமலாவை பார்ப்பனியம் சொந்தம் கொண்டாடியது. குல தெய்வம், தாலி, இராமாயணம் மற்றும் சாஸ்திர சடங்குகளில் பேத்திக்கு நம்பிக்கை உண்டு என்று பூரிக்கிறார் தாய் வழிப் பாட்டி இராஜம். என்னதான் கருப்பர் பார்ப்பனர் இனக் கலப்பு நடந்தாலும் கடல் தாண்டக்கூடாது, மாற்று வர்ணம் கலக்கக்கூடாது என்ற 'பிராமண தர்மங்கள்' மீறப்பட்டாலும் அதிகாரம் அடையாளம் ஆகும் போது 'கமலா எங்கள் வீட்டு மாட்டுப் பொண்ணு' என்பதில் அவர்களுக்கு குதூகலம். 'இந்துத்துவா' டிரம்பிடம் கலப்பு இனப் பெண் ஒருவர் தோல்வியடைந்தார் என்பது நமக்கும் வருத்தம் தான். இது மானுடப் பார்வை. மீறுவது தர்மமாக இருந்தாலும் அது 'நம்மாத்து' குழந்தை தானே என்றே அவாள்கள் பார்ப்பனர்கள் பார்க்கிறார்கள். இது தான் பார்ப்பனியத்தின் இரட்டை வேடம்

• • • • • • • • • • • • • •

டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆங்கில நாளேடு (நவம்பர் 3) ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அமெரிக்காவில் திருமணப் புரோகிதங்கள் சர்ச்சைக்குள்ளாகி வருகிறதாம். வைதீக முறையை மீறி நடக்கும் திருமணங்களுக்கும் புரோகிதர்கள் வந்துவிட்டார்கள். அமெரிக்காவில் 'ஓர் பால்' (same sex) திருமணங்கள் அதிகரித்துவருகின்றன. 2015இல் அமெரிக்கா இதற்கு சட்ட ஏற்பு வழங்கியுள்ளது. சப்ன பாண்டியா என்ற பார்ப்பனப் பெண் இந்த ஓர் பால் திருமணங்களை வேத முறைப்படி மந்திரம் ஓதி நடத்திவருகிறார். சக புரோகிதர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்களாம். திருநங்கை திருமணங்களையும் இவர் வேத முறைப்படி நடத்திவருகிறார். பெண் புரோகிதர் சப்ன பாண்டியாவும், முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த பாகிஸ்தானை சேர்ந்த பெண்ணும் திருமணம் செய்ய முடிவு செய்தனர். இவர்கள் திருமணத்தை நடத்தி வைக்க புரோகிதர்கள் மறுத்துவிட்டார்களாம்.

நியூயார்க் நகரைச் சேர்ந்த சுஷ்மா திவிவேதி என்ற பார்ப்பன பெண் தமது தாத்தாவின் வழியாக திருமண மந்திரங்களைக் கற்றுக்கொண்டு புரோகிதம் செய்கிறார். பெண்கள் வேதம் படிக்கக் கூடாது என்ற தடையை இவர் உடைத்தெறிகிறார். அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இவர் தொடர்ந்து பேசுகிறார். குடும்பங்கள் அங்கீகரிக்க மறுக்கும் திருமணங்களை நடத்தி வைக்க பல புரட்சி புரோகிதர்கள் வந்துவிட்டார்கள். இவர்கள் தங்களுக்குள்ளாக புலனம் (whatsapp) ஒன்றையும் உறுவாக்கியுள்ளனர். மதம் கடந்து, கடல் கடந்து, ஆண், பெண் பால் கடந்து வேத மந்திரங்கள், ''மாங்கல்ய தந்துனானேன மம ஜீவன ஹேது நா'' காதைத் துளைக்கிறது.

மணமகளுக்கு முதல் மனைவி உரிமைக் கோரும் சோமனும், கந்தர்வனும், அக்னியும் நிச்சயமாக விழிபிதுங்கி நிற்பார்கள்.

இவ்வளவையும் மீறி வைதீகம் கமலாவையும் கட்டிப்படிக்கும். அமெரிக்கப் புரோகிதத்துக்கும் முத்தம் கொடுக்கும்.

– இரா

தலையங்கம்

# பார்ப்பனர்கள் ஏன் பதறுகிறார்கள்?

தமிழ்நாட்டில் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்கிறார்கள் பார்ப்பனர்கள். வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் போல அந்தணர் பாதுகாப்புச் சட்டம் வேண்டும் என்று தமிழ்நாடு அரசிடம் கோரிக்கையோடு ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்துள்ளது.

இந்தியாவின் அரசியல் அதிகாரம் பார்ப்பனர்களிடம் தான் குவிந்திருக்கிறது. பிரதம அமைச்சகம், உச்சநீதிமன்றம், குடியரசுத் தலைவர் மாளிகை, வெளிநாட்டு தூதரகங்கள் என்ற அதிகார மட்டங்களில் பார்ப்பனர்கள் சிறுபான்மையினராக இல்லை; அவர்கள் தான் பெரும்பான்மை; சிறுபான்மையாக இருப்பவர்கள் பெரும்பான்மை அதிகாரத்தின் கீழ் தான் இருக்கிறார்கள். மட்டுமல்ல ஒன்றிய ஆட்சியின் இலட்சியமாக முன்வைக்கப்படும் 'இந்துத்துவா' அரசியல் பார்ப்பனர்களின் மேலாண்மையை உறுதிப்படுத்தும் பார்ப்பனியத்தை நோக்கியே நகர்த்தப்படுகிறது.

இந்துத்துவா அரசியலின் பெரும்பான்மையினர் பார்ப்பனரல்லாத சமூகத்தினராக இருந்தாலும் அவர்களின் அரசியல் பார்ப்பனிய மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் சேவகமாகவே இருக்கிறது. இந்துமதமும் பெரும்பான்மை பார்ப்பனரல்லாத மக்களைக் கொண்டதாகவே இருக்கிறது. சிறுபான்மை பார்ப்பனியத்துக்கு அவர்கள் அடிமைகளாகவே இருக்கிறார்கள்.

தன்மானமுள்ள தமிழர்கள் பார்ப்பனர்களை 'பிராமணர்' என்று அழைக்கக் கூடாது என்றார் பெரியார். இது அவர்கள் மீதுள்ள வெறுப்புக்காரணமல்ல; 'பிராமணியம்' – பிற பார்ப்பனரல்லாத மக்களிடம் திணித்த வெறுப்பும் – ஒடுக்குதலும் தான் காரணம். ஒரு மனிதன் 'உபநயனம்' செய்து காயத்திரி மந்திரங்களோடு பூணூல் அணிவிக்கப்பட்ட பிறகு அவன் 'பிராமணன்' என்ற பிறப்புக்கு உரியவன் ஆகிறான் என்று பார்ப்பனர்கள் கூறுகிறார்கள். 'பிராமணன்' என்ற (இரு பிறப்பு) அடையாள மாற்றம் வழியாக பிற வர்ணத்தவர்கள் மீது ஒதுக்குதலும் – பாகுபாடும் அறிவிக்கப்பட்டுவிடுகிறது. (பிராமண பெண்களுக்கே உபநயன உரிமைக் கிடையாது. அவர்களும் சூத்திரர்கள் தான்). பிராமணனே முதல் வர்ணம், பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர், பிற வர்ணாத்தாருடைய பொருளைத் தானமாகப் பெறக்கூடிய பிரபு என்று மனுதர்மத்தின் முதல் அத்தியாயம் கூறுகிறது. 'பிராமணன்' என்ற அடையாளத்தின் வழியே சமூக அதிகாரத்தைப் பறிக்கிறான். 'பிராமணன்' என்ற அடையாளத்துக்குள் வந்துவிட்டால் கடவுளே – அந்த 'பெயருக்கு' கட்டுப்பட்டது என்று ரிக் வேதம் கூறுகிறது.

தெய்வாதீனம் ஜகத் சர்வம்
மந்திராதீனம் து தெய்வதம்
தன் மந்திரம் பிரம்மனா தீனம்
தஸ்மத் பிரம்மணம் பிரபு ஜெயத்

(ரிக் வேதம் – 62வது பிரிவு – 102வது சுலோகம்)

இதன் பொருள் என்ன? "உலகம் கடவுளுக்குக் கட்டுப்பட்டது, கடவுள்கள் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். மந்திரங்கள் பிராமணர்களுக்கு கட்டுப்பட்டவை, பிராமணர்களே நமது கடவுள்" 'பிராமணன் என்ற ஒரு சொல் இவ்வளவு இழிவுக் குறியீடுகளுடன்' திமிர் காட்டுகிறது என்பதால் தான் பிராமணன் என்று அழைக்கக்கூடாது என்றார் பெரியார். 'அய்யா சாமி, அடிமை வந்திருக்கிறேன் என்றுதான் அழைக்க வேண்டும் என்பதற்கும் எங்களை பிராமணன் என்றே அழைக்க வேண்டும் என்பதற்கும் எந்த வேறுபாடும் இல்லை'.

'பிராமணன்' அடையாளமான பூணூலும் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதவரையும் 'சூத்திரர்' என்று இழிவுபடுத்துகிறது. இந்த அடையாளங்களை இப்போதும் கைவிட மாட்டோம் என்ற இறுமாப்பு பேசுகிறவர்கள் தான் தங்களுக்கு பாதுகாப்பு சட்டம் கேட்கிறார்கள். அதற்கு அந்தணர் பாதுகாப்புச் சட்டம் என்று இவர்களே பெயர்சூட்டுகிறார்கள். 'பிராமணர் பாதுகாப்பு' என்ற சொல்லைத் தந்திரமாக தவிர்த்துவிடுகிறார்கள்.

பார்ப்பனர்கள் தங்களை 'அந்தணர்கள்' என்று தமிழ் அடையாளத்தை ஏற்றுக்கொண்டால் சமஸ்கிருத பார்ப்பனிய பண்பாட்டு அடையாளத்தைக் கைவிடத்தயாரா?

வரலாற்றில் எப்போதோ 'பிராமணர்கள்' செய்த கொடுமைகளுக்கு இப்போது தண்டனை வேண்டுமா என்று கேட்கிறார்கள். வரலாற்றில் எப்போதோ வேதம் – சடங்கு – மனு சாஸ்திரம் – பகவத்கீதை – புராண இதிகாசங்கள் நியாயப்படுத்தும் 'வர்ண' பாகுபாடுகளை தூக்கிப் பிடிப்பது ஏன்? பாகுபாடுகளை நாங்கள் ஏற்கவில்லை என்று எந்த பார்ப்பனராவது கூற முன்வந்திருக்கிறார்களா? இன ஒதுக்கல் பேசும் கீதையையும் – இராமாயணத்தையும் – மனுஸ்மிருதியையும் புறக்கணிக்கிறோம் என்று அறிவிக்காத வரை 'பிராமண' எதிர்ப்பு இருந்தே தீரும்.

பிரதமர்களும், குடியரசுத் தலைவர்களும், ஆளுநர்களும், உச்சநீதிமன்ற நீதிபதிகளும் பார்ப்பன சங்கராச்சாரிகளிடம் நேரில் சென்று ஆசீர்வாதம் வாங்குகிறார்கள்; மண்டியிடுகிறார்கள். சங்கராச்சாரியாக ஒரு பார்ப்பனரல்லாதார் வர முடியாது.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் என்ற சட்டம் ஏன் வந்தது? சமுதாயத்தில் 'தீண்டாமையைத்' திணித்தது யார்? பார்ப்பனியம் தானே? இல்லை என்று கூறமுடியுமா? தீண்டப்படாத மக்கள் கோயில் நுழைவுக்குப் போராடிய போது ஆகமத்தைக் காட்டி அதை எதிர்த்தவர்கள் யார்? பார்ப்பனர்கள் தானே? அதே பார்ப்பனர்கள் 'வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்' போல் தங்களுக்கு சட்டம் வேண்டும் என்று கேட்கிறார்கள். 'குற்றவாளிகள் பாதுகாப்புச் சட்டம்' கேட்பதைப் போலவே இருக்கிறது.

தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் பாதுகாப்போடு தானே இருக்கிறார்கள்? தென்காசியில் ஒரு பார்ப்பனர் பூணூல் அறுக்கப்பட்டதாக ஒரு புரளியைக் கிளப்பினார்கள். அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்று காவல்துறை மறுத்துவிட்டது. உடனே தமிழ்நாடு ஆளுநரிடம் மனு கொடுத்தார்கள். இப்போது ஆர்ப்பாட்டக் களத்துக்கு வந்திருக்கிறார்கள். திராவிட மாடல் ஆட்சியில் பிராமணர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற கற்பனைப் பிரச்சாரத்தைக் கட்டமைத்தால் தமிழ்நாடு அரசுக்கு நெருக்கடி அதிகரிக்கும் என்பதே அவர்களின் உள்நோக்கமாக தெரிகிறது.

சொல்லப்போனால் இந்த ஆர்ப்பாட்டம், தமிழ்நாட்டில் பார்ப்பனியத்தின் உண்மை முகத்தை இளைஞர்களிடம் கொண்டு செல்லும் வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது என்பதால் நாம் வரவேற்கிறோம். தங்களுக்கு மட்டுமே உரிமைக் கோரும் கடவுள்களை நம்பாமல் பார்ப்பனர்கள் வீதிக்கு வந்திருப்பது அவர்களுக்கே கடவுள் மீதே நம்பிக்கை இல்லை என்பதை உணர்த்துகிறது.

## இந்துமதத்தை 'விஷமாக்கிய' பிராமணர்கள்! – விவேகானந்தர் கூறுகிறார்.

"சூத்திரன் வேதம் ஓதுவதைக் கேட்டால் காதில் ஈயத்தை ஊற்று., கேட்டதில் ஒரு வரியை ஞாபகத்தில் வைத்துவிட்டானென்றால் அவனது நாக்கை வெட்டு என்பன போன்ற கடுமையான வாசகங்கள் உள்ள புத்தகங்கள் உள்ளன. இது மிகவும் மட்டமான காட்டுமிராண்டித்தனம். சந்தேகமே இல்லை. இத்தகைய காரியங்களைச் செய்த பேய்கள் முன்காலங்களில் இருந்திருக்கின்றனர்.

"அதிகாரங்களைக் கெட்ட விஷயங்களில் பயன்படுத்தினால் தகுந்த கேடு விளைகிறது. அதிகாரங்களை நல்ல காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்திய ரிஷிகள் சேர்த்து வைத்தப் பொக்கிஷங்களை (கருத்துகள்), இவற்றுக்கு டிரஸ்டியாக நியமிக்கப்பட்ட பிராமணன், ஏனைய மக்களுக்கு பகுத்து வழங்காததால் தான் முஸ்லிம் படையெடுப்பு (வட) இந்தியாவில் வெற்றியடைந்தது. டிரஸ்டியாக நியமிக்கப்பட்ட பார்ப்பனன் கருவூலத்தைத் திறந்து பொக்கிஷத்தை (நல்ல கருத்துகள்) ஆரம்பத்தில் இருந்தே அனைத்து மக்களுக்கும் வழங்காததால் தான் இந்தியர்களுக்கு தங்கள் மதத்தின் மீது ஈடுபாடு ஏற்படவில்லை. எந்த மதத்தினரும் சிறிது படையுடன் இந்தியாவிற்குள் நுழைந்தாலும் அவர்களுக்கெல்லாம் நாம் 1000 வருடங்களாக அடிமைப்பட்டோம். ஏன் என்றால் நம்மிடம் ஒற்றுமை இருக்கவில்லை. வங்காளத்தில் ஒரு பழைய மூடநம்பிக்கை உள்ளது. நல்ல பாம்பு ஒருவனைக் கடித்து பின்னர் அந்த பாம்பே தனது விஷத்தைக் கடிப்பட்டவனிடமிருந்து திரும்ப உறிஞ்சி எடுத்துவிட்டால் அவன் பிழைத்துக்கொள்வான் என்பதே இந்த நம்பிக்கை. இதே போன்று பார்ப்பான் இந்து மதத்திற்குள் தான் செலுத்திய விஷத்தை திரும்ப எடுக்க வேண்டும்"

**(திருச்சி மாவட்டம் ஷ்ரி ராமகிருஷ்ண தபோவனம் 1983இல் வெளியிட்ட The man making message of Vivekananda for the USE of College Students என்கிற புத்தகம் பக்கங்கள் 150, 151, 152, 155, 156)**

## பூணூலைப் பற்றி காந்தியார்!

நான் பெரியவன் ஆகிவிட்ட பிறகு இந்தியாவிலும், தென்னாப்பிரிக்காவிலும், பலர் எண்ணத்தின் பேரிலேயே நான் பூணூல் போட்டுக்கொள்ளும் படி செய்ய முயன்றார்கள். ஆனால் அவர்கள் முயற்சி வெற்றியடையவில்லை. சூத்திரர்கள் பூணூல் போட்டுக்கொள்ளக் கூடாது என்றால், மற்ற வருணத்தினருக்கு மாத்திரம் அதைப் போட்டுக்கொள்ளுவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று விவாதித்தேன். பூணூல் கொள்ளுவது அனாவசியமான பழக்கம் என்பது என் கருத்து. ஆகையால் அதை அணிய வேண்டும் என்பதற்குப் போதுமான நியாயம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பூணூலைப் பொருத்தவரையில் எனக்கு எந்தவித ஆட்சேபமும் இல்லை. ஆனால் அதை அணிய வேண்டும் என்பதற்குரிய நியாயம் தான் எனக்குத் தென்படவில்லை.

## பூணூலைப் பற்றி இராமகிருஷ்ணர்!


பூணூல் அணிவது பற்றி பரமஹம்சர் என்று மதவாதிகளால் போற்றப்படும் ராமகிருஷ்ணர் கூறிய கருத்து.

"The Sacred thread is also bondage for it is a sign of ego-ism, I am a Brahmin and superior to all"

(Shree Ramakrishna the great master" நூலின் 137வது பக்கம்)

"பூணூல் என்பது அகங்காரச் சின்னம்; நான் எல்லோரையும் விட உயர்ந்த பிராமணன் என்பதன் சின்னம்"

## மேதகு பிரபாகரன் ஆதரித்த திராவிடம்



திராவிடம் தான் எனது எதிரி என்று சீமான் முழங்குகிறார். அவர் பேசும் தமிழ்த்தேசியத்துக்கு முதன்மை எதிரி 'இந்தியம்' அதாவது 'இந்திய அரசு' அதைப் பேசுவதற்கு அவருக்கு அச்சம். சட்டம் பாயும்; தேர்தலில் நிற்க முடியாது. எனவே மக்களை 'திசை திருப்ப' 'திராவிடத்தை' முன்னிறுத்துகிறார். அவரது நாம் தமிழர் கட்சியின் தலைவர் வழிகாட்டி தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் தான் என்கிறார். சரி, மேதகு பிரபாகரன் திராவிடத்துக்கு எதிரியா? இல்லை.

1978இல் கியூபாவில் உலகப் போராளிகள் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார். அந்த ஆங்கில அறிக்கையில் என்ன கூறப்பட்டிருந்தது?

*WHO ARE THE THAMILS (DRAVIDIANS)?*

The Thamils have ancient and thamil language which is one of the oldest language of india that formed the dravidian family spoken today in thamilnadu of india, thamil eezham of Ceylon, singapore, malaysia, fiji islans, south africa and in other country bye more than 65 million people. In Ceylon thamils are 3 million in number.

"இந்தியாவின் மூத்த மொழிகளில் ஒன்றான எங்கள் தமிழுக்கு நீண்ட கலாச்சார அடையாளம் உண்டு. நாங்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உலகம் முழுவதும் எங்கள் மொழி பேசும் மக்கள் 63 மில்லியன் பேர். சிலோனில் நாங்கள் 3 மில்லியன் பேர்"

# அடிகளார் பங்கேற்ற வாக்காளர் மாநாடு (3)

விடுதலை இராசேந்திரன்



**சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் 29.10.2024 அன்று நிமிர்வோம் வாசகர் வட்ட சார்பில் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு சிறப்புக் கூட்டம் நடந்தது. அடிகளார் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் திறந்து வைத்து ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..**

அடிகளார் தனது குன்றக்குடி கிராமத்தைத் தொழில் வளர்ச்சி நிறைந்த கிராமமாக மாற்ற வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயல்பட்டார். அந்தக் கிராமத்துக்கு நேரு, இந்திரா காந்தி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் வருகைதந்துள்ளனர். பெரியாருக்கும், அடிகளாருக்கும் இடையே நிறைய உரையாடல்கள் நிகழ்ந்திருக்கின்றன. இதற்கு இடையில் பெரியாரும் அடிகளாரும் மதுரைக்கு தொடர்வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த போது அடிகளாருக்கு திருக்குறள் புத்தகத்தைக் கொடுத்து “குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து மானங் கருதக் கெடும்” இந்தக் குறளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று பெரியார் கேட்டார். தனிப்பட்ட மான, அவமானம் பார்த்ததினால் தான் இந்தத் தமிழ் சமுதாயம் தோல்வியைச் சந்தித்துக் கொண்டே இருக்கிறது. பொதுத் தொண்டுக்கு வருபவருக்கு அது இல்லை என்று பெரியார் சொன்னார். பின்னர் பேசிய அடிகளார், இந்தக் குறளைப் பற்றி நான் பல்வேறு இடங்களில் பேசியுள்ளேன். ஆனால் தற்போது பெரியார் தந்த விளக்கம் தான் தன்னுடைய வாழ்க்கைப் போக்கையே மாற்றியமைத்தது என்றார்.

1962 பொதுத் தேர்தலை ஒட்டி வாக்காளர் மாநாட்டைப் பெரியார் நடத்தினார். அந்த மாநாட்டிற்கு குன்றக்குடி அடிகளார் தலைமை தாங்கினார். அப்போது விடுதலையில் ஒரு அறிவிப்பு வருகிறது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் சன்னிதானத்தை 07.01.1962 அன்று நடக்கும் ‘வோட்டர்கள்’ மாநாட்டிற்கு பிரதம ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ள ‘பிரார்த்தனை’ செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பு வந்தது. இதைப் படித்த பெரியாரின் உதவியாளர் புலவர் இமயவரம்பன், அய்யா விடுதலையில் இப்படி வந்துள்ளதே என்றார். அதற்கு ஆமாம் நான் தான் எழுதினேன், அப்படியே போடுங்கள் என்றார் பெரியார். சங்கராச்சாரிக்கு எப்படி பார்ப்பனர்கள் மரியாதையைத் தருகிறார்களோ, அதுபோல தான் தமிழர்களுக்கு என்று இருக்கிற அடிகளாருக்கு நாம் முழு மரியாதையை வழங்க வேண்டும் என்று வெளிப்படையாகவே பெரியார் எழுதினார். அப்படித்தான் அடிகளாரும் செயல்பட்டுவந்தார். கடல் கடந்து செல்லக்கூடாது என்ற தடையை முறியடித்து அமெரிக்கா, மலேசியா மற்றும் அரபு நாடுகளுக்குச் சென்றார். இப்படி பல முற்போக்கான செயல் திட்டங்களை எல்லாம் அவர் செயல்படுத்தினார்.

அவர் இந்து சமயத்தைக் கடுமையாகச் சாடினார். 1990-இல் வெளிவந்த பெரியார் பிறந்தநாள் மலரில் வெளிவந்த ஒரு கட்டுரையில் இப்படிக் குறிப்பிடுகிறார். “இந்துவாக இருந்தால் அறிவுக்குப் புறம்பான வேதங்களை ஒத்துக் கொண்டாக வேண்டும். வேதங்களை ஒத்துக் கொண்டால் அவ்வழிப் பிறந்த ஜாதி வேற்றுமைகளை ஒத்துக்கொண்டாக வேண்டும். சுற்றிவளைப்பானேன் நாமே நம்மை சர் சூத்திரன் என்றும், இழி மக்கள் என்றும் ஒத்துக் கொள்ள வேண்டும். இந்துவாகப் பிறந்தால் பார்ப்பனருக்கு உயர்ந்தப் பார்வையும், இடமும் கொடுத்தாக வேண்டும். இந்த இந்துமதத்தின் வழியில் நாம் வாழ்வது நியாயம் தானா?” என்றார் அடிகளார். சைவ மடாதிபதியான அடிகளார், இந்து சமயத்தைக் கண்டித்துப் பெரியாரின் குரலாகப் பல்வேறு இடங்களில் ஒலித்திருக்கிறார்.

“கடவுளை மற! மனிதனை நினை!” என்று பெரியார் சொன்னதைப் போலவே 1992-இல் ‘மனிதனை நினை’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார் குன்றக்குடி அடிகளார். அதில், “ஏன் இந்த அவலம். மனிதனை மதிக்கும் பண்பு நமது பண்பாட்டில் இல்லை. எல்லோரும் கடவுளை மட்டுமே நாடுகிறார்கள், நெருங்குகிறார்கள். மனிதனை நெருங்குபவன்,

“இந்துவாக இருந்தால் அறிவுக்குப் புறம்பான வேதங்களை ஒத்துக் கொண்டாக வேண்டும். வேதங்களை ஒத்துக் கொண்டால் அவ்வழிப் பிறந்த ஜாதி வேற்றுமைகளை ஒத்துக்கொண்டாக வேண்டும். சுற்றிவளைப்பானேன் நாமே நம்மை சர் சூத்திரன் என்றும், இழி மக்கள் என்றும் ஒத்துக் கொள்ள வேண்டும். இந்துவாகப் பிறந்தால் பார்ப்பனருக்கு உயர்ந்தப் பார்வையும், இடமும் கொடுத்தாக வேண்டும். இந்த இந்துமதத்தின் வழியில் நாம் வாழ்வது நியாயம் தானா?”

கடவுளை நெருங்குகிறான் என்பது மதத்தின் உபதேசமாக இருந்தாலும் செயலில் அப்படி இல்லை. இன்னும் நமது நாட்டில் மனித மதிப்பீட்டு சமுதாயம் தோன்றவில்லை. கடவுளும் பணமும் தான் மதிக்கப்படுகின்றன. கடவுளுக்குப் பணம் துணை. பணத்திற்குக் கடவுள் துணை. இது இன்றைய சமுதாயப் போக்கு. இந்தப் போக்கு மாற வேண்டும்” என்று எழுதினார்.

பெரியார் பற்றி அடிகளார் எழுதிய ஒரு கட்டுரையில்,“இந்தியாவில் எங்கு பார்த்தாலும் மதச் சண்டைகள், ஜாதிக் கொடுமைகள். இன்று இந்தியாவை, தமிழ்நாட்டை வருத்துபவை அறியாமை, ஏழ்மை, வறுமை, சமூகக் கொடுமைகள். இன்று இந்தியாவில் பக்திக்குப் பஞ்சமில்லை. ஆனால் உழைப்பும் பகுத்தறிவும் தான் இல்லை, இன்று தேவை பகுத்தறிவும் கடுமையான உழைப்பும்” என்று எழுதினார். கிட்டத்தட்ட ஒரு பெரியாரிஸ்ட் பார்வையில் தான் அவரது செயல்பாடுகள் இருந்தன.

1971, தமிழ்நாட்டில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் போராட்டம் வலுப்பெற்றது. அதற்குக் காரணம், அப்போது சேலத்தில் நடைபெற்ற ‘மூடநம்பிக்கை ஒழிப்பு’ மாநாட்டில் விநாயகன் - இராமன் - சிவன் உள்ளிட்டப் பல்வேறு கடவுள்களின் பிறப்புகளைச் சித்திரமாக (Cartoon) வரைந்து ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டது. அந்த ஊர்வலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ‘ஜனசங்கம்’ கருப்புக் கொடி காட்டினார்கள். அப்போது ஊர்வலத்தை நோக்கி செருப்பை எடுத்து வீசினார்கள். ஊர்வலத்தில் பங்கேற்ற பெரியார் தொண்டர்கள் அந்தச் செருப்பை எடுத்து கடவுளர் படங்களை அடித்துக் கொண்டே வந்தனர். அது தேர்தல் பிரச்சனையாக மாற்றப்பட்டது. ‘துக்ளக்’ படம் பிடித்து வெளியிடப்பட்டது. கலைஞர் ‘துக்ளக்’ இதழைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். அப்போது இருந்த காங்கிரஸ், சுதந்திரா கட்சிகள் இந்தச் சம்பவத்தைத் தேர்தல் பிரச்சனையாக முன் வைத்தன.

‘இராமனைச் செருப்பால் அடித்த திமுகவுக்கா உங்கள் ஓட்டு’ என்று போஸ்டர் அடித்து ஒட்டினார்கள். அந்தச் சமயத்தில் பெரியாரின் படத்தையும் செருப்பால் அடித்தனர். தீயிட்டுக் கொளுத்தினார்கள். அப்போது பெரியார், நன்றாக செருப்பால் அடியுங்கள். உங்களில் யாருக்காவது எனது படம் தேவைப்பட்டால் விடுதலை அலுவலகத்திற்கு எழுதுங்கள். நான் பாதி விலைக்கு செருப்பையும், படத்தையும் அனுப்பி வைக்கிறேன் என்றார். இதை ஏன் அனுப்பி வைக்கிறேன் என்றால் “இராமசாமி நாயக்கன் இராமனைச் செருப்பால் போட்டால், ஏன் இராமசாமி நாயக்கன் செருப்பால் போட்டான் என்று மக்கள் கேட்பார்கள். இராமன் படத்தை செருப்பால் அடித்தார்கள் என்று நீங்கள் சொல்வீர்கள். ஏன் இராமன் படத்தை செருப்பால் போட்டார்கள் என்று மக்கள் கேட்பார்கள். இதன் வழியாகத்தான் எனது கொள்கைகள் வளரும்” என்றார் பெரியார். எனது கொள்கைகள் எப்போதும் எதிரிகள் வழியாகத்தான் பரப்பப்பட்டு இருக்கிறது என்றார். அந்தத் தேர்தலில் தி.மு.க. மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. அப்போது கலைஞர் பெரியாருக்கு ஒரு தந்தி அனுப்பினார். “நீங்கள் உலகப் புகழ் பெற்று விட்டீர்கள். என் மீது விழுந்தப் பழி நீங்கி விட்டது” என்று அந்தத் தந்தியில் குறிப்பிட்டிருந்தார்.

அப்படிப்பட்ட காலகட்டத்தில் குன்றக்குடி அடிகளார் எடுத்த நிலைப்பாடு என்ன?

**எது வேண்டும்?**

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்.**

**- இது உண்மை சமயம்.**

**இன்று ‘ஆஸ்திகம்’ என்பது உயர் சாதியினர் நலம்.**

**இன்று ‘நாஸ்திகம்’ என்பது பெருவாரியான தமிழ் மக்களின் நலம்.**

**உங்களுக்கு இதில் எது வேண்டும்?**

என்று குன்றக்குடி அடிகளார் வெளிப்படையாக அறிவித்தார். இது மக்கள் மத்தியில் பெறும் வரவேற்பைப் பெற்றது. எந்தவொரு நிகழ்வானாலும் அதில் கொள்கைக்கான அணுகுமுறை - சந்தர்ப்ப சூழலோடு பொருத்திப் பார்க்க வேண்டும். பழுத்தக் கடவுள் நம்பிக்கைக் கொண்ட ஒரு ஆதீனம் ‘நாத்திகத்துக்கு’ ஆதரவாக குரல் கொடுப்பதை முரண்பாடு என்று பார்க்கக்கூடாது. அந்த அரசியல் சூழலில் ‘ஆன்மீகம்’ எந்தச் சக்திகளுக்கு துணையாக நின்றன என்ற அணுகுமுறையே சரியான இயங்கியல் கண்ணோட்டம்.

பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னதைக் கூட அடிகளார் ஏற்றுக் கொண்டார். அதற்கான விளக்கத்தையும் கூறினார். “தமிழ் அறிவியல் தமிழாக வளர முடியவில்லை. வளர்க்க வேண்டும் என்ற முனைப்பும் இல்லை. தெருக்களில் வழக்கமானப் பட்டிமன்றங்கள் தான். கைகேயியா - கூனியா போன்ற தலைப்புகள். எங்கனம் தமிழன் முன்னேறுவான், தமிழ் வளரும். ஆதலால் பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்றார். இப்படிப் பெரியார் சுரணை வரும்படி திட்டியும் கூட தமிழை வழிபடும் மொழியாக்கியுள்ளனர். இன்னமும் தமிழ் வழிபாட்டுக்குரியதாகவே இருக்கிறது. இன்று கூட தமிழ், தமிழினத்திற்கு வளர்ச்சித் தரக்கூடியதாக இல்லை என்று பெரியாரின் கருத்துகளை அடிகளார் பேசினார்.

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதில் கூட அடிகளாருக்கு மாற்றுக் கருத்து உண்டு. “இது தமிழர் பண்பாடு அல்ல, தமிழர் பண்பாடு என்பது அர்ச்சகர் என்பதே கிடையாது. தமிழர்களாக இருக்கிற எவரும் நேராக கடவுளிடம் சென்று பூச்சொரிந்து, நீர் சொரிந்து உள்ளே போய் வழிபட வேண்டும். அர்ச்சகர் என்ற இடைத்தரகர் வேண்டாம் என்ற நிலைப்பாட்டில் தான் அவர் இருந்தார்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மாணவர்களிடம் மதப் பிரச்சாரம் செய்யாதே!

## அறநிலையத்துறையை எதிர்த்து குரல் கொடுத்த கழக மாணவர்கள் கைது!

சென்னை : திராவிடர் விடுதலைக் கழகத்தின் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில், “இந்துசமய அறநிலையத்துறையே! கல்வி நிலையங்களில் மதத்தைத் திணிக்காதே! மாணவர்களை மதவாதிகளாக மாற்றாதே! மதச்சார்பின்மையைக் குலைக்காதே!” எனும் கோரிக்கையை வலியுறுத்தி முதலமைச்சருக்கு மனு அனுப்பும் போராட்டம், 05.11.2024 அன்று இராயப்பேட்டை பெரியார் படிப்பகம் முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் அமைச்சர் சேகர்பாபுவைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 20க்கும் மேற்பட்டோரை காவல்துறை கைது செய்து, மாலை 7 மணிக்கு விடுவித்தது.

போராட்டத்தில் பேசிய பேரன்பு, “பழனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாட்டில் பள்ளி, கல்லூரிகளில் கந்தசஷ்டி கவசத்தைப் பாராயணம் செய்யவைப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போதே தி.வி.க. உட்பட பல அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தோம். அண்மையில் சென்னை திருவான்மியூர் பாம்பன் சுவாமி கோயிலில் 150 மாணவர்களை கந்த சஷ்டி பாராயணம் பாடவைத்திருந்தார்கள். மேலும், 738 மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்றும் தொடர்ந்து 12 கோயில்களில் அவர்களைப் பாடவைக்க இருப்பதாகவும் அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார். இந்தச் செயல்பாடு அவர் சார்ந்துள்ள கட்சிக்கு எதிரானது. மதச்சார்பின்மைக்கு எதிரானது. எனவே, அவர் இந்தப் போக்கை நிறுத்திக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் மதச்சார்பின்மை நீண்ட காலமாகத் தொடர்ந்துவருகிறது. அதைச் சீர்குலைக்கும்படியாக அமைச்சர் சேகர்பாபுவின் செயல்பாடுகள் இருக்கின்றன. இந்தப்போக்கு தொடருமானால் தொடர்ந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்.” என்று கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவரணி, மாணவர்களிடையே பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது நினைவுகூறத்தக்கது.

# திராவிட இயக்க நூற்றாண்டு

## ஈரோடு வடக்கு மாவட்டம் தயாராகிறது

கோபி : ஈரோடு வடக்கு மாவட்டக் கழக மாதாந்திரக் கலந்துரையாடல் கூட்டம் 3.11.2024 அன்று தோழர் நாகப்பன் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு T.N. பாளையம் ஒன்றியச் செயலாளர் ஜெயக்குமார் தலைமை தாங்கினார். கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை.

1) திராவிட இயக்க நூற்றாண்டு விழா மற்றும் குடிஅரசு நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் டிசம்பரில் சத்தியமங்கலத்தில் நடத்துவது எனவும்.

2) வருகின்ற 10.11. 2024 ஞாயிறு மாலை நம்பியூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கோசனம், பருத்திக்காட்டு மேடு ஆகிய பகுதிகளில் கொடியேற்று விழா மற்றும் தெருமுனைக் கூட்டம் நடத்துவது

3) 17.11.2024 அன்று சத்தியமங்கலம் ஒன்றிய பகுதிகளில் கொடியேற்று விழா நிகழ்வு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. மேலும் கோபி ஒன்றியச் செயலாளராக கோட்டு புள்ளம்பாளையத்தைச் சேர்ந்த சூர்யா (எ) ரகு செயல்படுவார் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## வினா விடை

• *பாதுகாப்புக் கோரி தமிழ்நாடு அரசைக் கண்டித்து பார்ப்பனர் ஆர்ப்பாட்டம்* **– செய்தி.**

**ஆமாம்! கடவுளிடமா வேண்டுதல் செய்ய முடியும்? அது கல் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.**

• *தாளவாடி கிராமத்தில் பக்தர்கள் ஒருவர் மீது ஒருவர் சாணி வீசி திருவிழா கொண்டாடினர்.* **– செய்தி.**

**கேட்டால் சாணியில் உள்ள புழு தோலுக்கு நல்லது என்பார்கள். நமக்கேன் வம்பு..**

• *கமலா ஹாரிஸ் வெற்றிக்கு புரோகிதர்கள் தமிழ்நாட்டுக் கோயிலில் பிரார்த்தனை* **– செய்தி**

**பகவான் கடல் தாண்டி ஆசிர்வதிப்பது தர்மத்துக்கு உட்பட்டது தானா?**

• *தமிழ்நாட்டில் முன்விரோதமாக நடக்கும் கொலைகளை முன் கூட்டியே தெரிந்து கொள்ளாத தி.மு.க. – எடப்பாடி பழனிச்சாமி கண்டனம்*

**உலகத்திலேயே இப்படி ஒரு கண்டன அறிக்கை விடும் ஒரே தலைவர் எடப்பாடி மட்டுமே இருக்க முடியும்.**

• *திருச்செந்தூர் முருகன் கோயிலில் ‘சூரசம்ஹாரம்’* **– செய்தி**

**கடந்த ஆண்டு முருகனால் சம்ஹாரம் (கொலை) செய்யப்பட்ட சூரன், மீண்டும் உயிர் பிழைத்து வந்துவிட்டானா?**

• *இராசிபுரம் மாரியம்மன் கோயிலில் பக்தர்களுக்கு அர்ச்சகர்கள் சாட்டையால் அடித்து ஆசிர்வாதம்* **– செய்தி**

**மனித உரிமை ஆணையம் இதையெல்லாம் கேள்வி கேட்காதா?**

## பேராவூரணியில் கழகக் கூட்டம்

# பால்.பிரபாகரன் பங்கேற்பு

தஞ்சை மாவட்டக் கழக சார்பில் பேராவூரணியில் குடிஅரசு நூற்றாண்டு விழா, சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா, பெரியார் 146 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம், 3.11.2024 அன்று பேராவூரணி அண்ணா சிலை அருகில் நகர அமைப்பாளர் தா. கலைச்செல்வன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் சித.திருவேங்கடம் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பாளர் வி. இராசமாணிக்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பாளர் வழக்குரைஞர் வி. கருப்பையா, காங்கிரஸ் கட்சி பொறுப்பாளர் சேக்இப்ராம்சா, மனித நேய ஜனநாயக கட்சிப் பொறுப்பாளர் ச. அப்துல் சலாம், அறநெறி மக்கள் கட்சி பொறுப்பாளர் ஆயர் த. ஜேம்ஸ், மதிமுக பொறுப்பாளர் க.குமார், தமிழ் வழிக்கல்வி இயக்கப் பொறுப்பாளர் மெய்ச்சுடர் நா. வெங்கடேசன், தமிழக மக்கள் புரட்சிக் கழகப் பொறுப்பாளர் மூர்த்தி, திவிக தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர் கு. பாரி, சிவகங்கை மாவட்டச் செயலாளர் பெரியார் முத்து, மக்கள் விடுதலை முன்னணி மாநிலப் பொதுச்செயலாளர் மனோகரன் ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாக திவிக பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் அவர்கள் தந்தை பெரியார் குடிஅரசு இதழ், சுயமரியாதை இயக்கம் தொடங்கி அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும், பெரியாரின் தொண்டால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றம் குறித்தும், திராவிடர் இயக்கத்தால் தமிழ் நாடு பெற்ற வளர்ச்சி குறித்தும், பார்ப்பனிய கைக்கூலிகளான போலித் தமிழ்த் தேசியக் கம்பெனிகள் பெரியார் குறித்தும் திராவிடம் குறித்தும் கூறும் பொய்ப்பரப்புரைகளுக்கு ஆதாரப்பூர்வமான மறுப்புகளையும், விளக்கங்களையும் எடுத்துக் கூறி எழுச்சியுரையாற்றினார்.

பேராவூரணி ஒன்றியத் தலைவர் அ. கோவேந்தன் நன்றி கூறினார். பேராவூரணி கடைவீதி முழுவதும் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் மூலம் ஆங்காங்கே நின்ற பொதுமக்கள் கவனித்தனர்.

கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பாளர்கள் மூர்த்தி, சித்ரவேல், முருகேசன், நீலகண்டன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பாளர்கள் ஆஸ். எஸ். வேலுச்சாமி, தோழர் செந்தில் குமார், மதிமுக பொறுப்பாளர்கள் மணிவாசன், கருணாகரன், மனிதநேய ஜனநாயகக் கட்சி விவேக் ரொசாரியோ, அர்னால்டு, தமிழக மக்கள் புரட்சிக் கழகம் பி. எஸ். மூர்த்தி, தமிழ்வழிக் கல்வி இயக்கம் த. பழனிவேல், திராவிடர் கழகப் பொறுப்பாளர் மணக்காடு சதிசு, மக்கள் விடுதலை முன்னணிப் பொறுப்பாளர்கள் அருணகிரி, முருகன், பாபு, திவிக சிவகங்கை மாவட்டத் தலைவர் முத்துக்குமார், இளங்கோ, வினோத் ராசா, பேராவூரணி ஒன்றியச் செயலாளர் மருத.உதயகுமார், ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர் க.சொ.சிவசுப்பிரமணியன், பட்டுக் கோட்டை ஒன்றியச் செயலாளர் கவிமணி, சேதுபாவாசத்திரம் ஒன்றிய அமைப்பாளர் சுப. ஜெயச்சந்திரன், மரக்காவலசை, அறிவுச்செல்வன் பெரியசாமி, திவிக ஆதரவாளர்கள் கொன்றை கார்த்தி, வீரக்குடி கோபி, சமூக செயற்பாட்டாளர் வீரக்குடி ராசா மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தேன்மொழி முடிவெய்தினார்.



20 ஆண்டுகளுக்கு மேலாக “புரட்சிப் பெரியார் முழக்கத்தின்” கணிப்பொறி தட்டச்சு வடிவமைப்பாளராகப் பணியாற்றிய தேன்மொழி முடிவெய்தினார் என்ற செய்தி நெஞ்சை உலுக்கியது. ஒவ்வொரு வாரமும் இரண்டு நாட்கள், பத்திரிகையாளர் குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் தான் பணிகள் நடக்கும். பெரியாரியக் குடும்பத்தைச் சேர்ந்தவர் தேன்மொழி. 1990இல் விடுதலை அலுவலகத்தில் பணியில் சேர்ந்தார். விடுதலை அலுவலகத்தில் பணிபுரிந்த சி.குணசேகரன் அவர் கணவர். ஜாதி மறுப்புத் திருமணம் செய்தவர்.

2003ஆம் ஆண்டில் இருந்து பெரியார் முழக்கத்தின் கணினி வடிவமைப்பாளராகப் பணிபுரிந்துவந்தவர். பெரியார் முழக்கத்தில் பணிபுரிந்த தோழர்கள் அனைவருடனும் குடும்ப உறவாகப் பழகிய இனிமையாளர். கடந்த இரண்டு ஆண்டுகளாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார். கடந்த 4.11.2024 அன்று மாரடைப்பால் தனது வாழ்வை முடித்துக்கொண்டார். தோழர்களுடன் இறுதி மரியாதை செலுத்தினோம். அவரது இணையருக்கும், ஒரே மகன் அழகு நம்பிக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 08, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran